# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் – 638183.




# ஆண்டு மலர்

# 2000

1999–2006

இதழ் - 45

Scanned with CamScanner



எமது கல்லூரி முதல்வர் பேரா. சி.பழநீசுவாமி M.Sc., M.Phil, B.Ed., அவர்கள்

## மலர் அறிமுகம்

அன்புடையீர்,

எங்களது கல்லூரி ஆண்டு மலரின் 44–வது இதழை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். மாணவர்களின் படைப்பாற்றல், நுண்ணறிவு, ஆளுமைவளர்ச்சி, கற்பனை வளம், சீரிய சிந்தனை இவைகளின் விளைவாக தோன்றியதே இம்மலர். இதனை நல்லமுறையில் உருவாக்கித்தந்த **கிரிமுருகன் அச்சகத்தாருக்கும்** பல்லாற்றானும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறி மலர் பூங்காவிற்குள் வருக மலரின் மணத்தை நுகர்க என மலர்க்குழுவின் சார்பாக அன்புடன் அழைக்கிறோம்.

*மலர்க்குழு,*

## மலர்க்குழு 1999 – 2000

| | |
|---|---|
| பேரா. C.பழநீசுவாமி M.Sc., M.Phil., B.Ed., (கல்லூரி முதல்வர்) | தலைவர் |
| முனைவர் A.செங்கோட்டையா M.Sc., M.Ed., Ph.D., | உறுப்பினர் |
| திரு. P.பன்னீர்செல்வம் (மாணவர் தலைவர்) | உறுப்பினர் |
| திரு. T.மாதையன் (ஆண்டு மலர்ச்செயலர்) | உறுப்பினர் |
| முனைவர் R.தங்கவேலு M.A., M.Ed., PGDTE., Ph.D., | பதிப்பாசிரியர் |

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் 638 183

நாமக்கல் மாவட்டம்.

## கல்லூரி ஆண்டறிக்கை 1999.2000

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே, பேராசிரியப் பெருமக்களே, அலுவலக அன்பர்களே என்னினும் இனிய மாணவச் செல்வங்களே, பெருமைக்குரிய விருந்தினர்களே, இக்கல்லூரியின் 45 வது ஆண்டு விழாவும் விளையாட்டு விழாவும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழாவும் ஒருங்கே நிகழும் இந்நாளில் உங்கள் அனைவரையும் வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினை உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

## கல்லூரியின் வரலாறு

இக்கல்லூரி 1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பேராசிரியர் வி.டி. டைட்டஸ் அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. தற்போது உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்த இக்கல்லூரி 1972 ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டிடம் கட்டப்பட்ட பின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. 1959 ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974 ஆம் ஆண்டு எம்.எட் பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன. 1982 ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாக இருந்த எம்.எட் பட்டபடிப்பு முழு நேர வகுப்பாக மாற்றப்பட்டது. 1990 ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் பெண்களும் சேர்த்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கத்தோடு ஊக்கமும் நல்கி சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கிய ஜே.கே.கே, எஸ்.எஸ்.எம் குடும்பத்தாருக்கும், முன்னாள் முதல்வர்கட்கும் பெரியோர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்லூரி மாணவர் சேர்க்கை

இக்கல்லூரியில் பி.எட் பட்டபடிப்பு பயிலுவதற்காக ஏற்கனவே 100 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக இவ்வாண்டு 20 பி.லிட் பட்டதாரிகள் பயில்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு கல்லூரியில் பி.லிட் வகுப்பில் சேர 1952 மாணவர்கள் விண்ணப்பித்தனர். கல்லூரிக் கல்வி ஆணையரின் வழிகாட்டுநெறிப்படி நுழைவுத் தேர்வு அடிப்படையில் 120 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். தற்போது 119 மாணவர்கள் பி.எட்., வகுப்பில் உள்ளனர். இவர்களில் 48 பேர் ஆண்கள், 71 பேர் பெண்கள், எம்.எட் பட்டபடிப்புக்கு 8 இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 3 மாணவர்களும் 2 மாணவிகளும் ஆக ஐந்து பேர் பயின்று வருகின்றனர். இக்கல்லூரி 1998 – 99 முதல் பெரியார் பல்கலைக் கழக இணைவு பெற்றது அத்துடன் இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்வி கழகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

## மாணவர் மன்றங்கள்

இவ்வாண்டு கீழ்கண்ட அனைத்து மன்றங்களுக்கும் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு ஒற்றுமை உணர்வோடு பொறுப்புடன் செயல்பட்டு வந்துள்ளனர்.

| | |
|---|---|
| மாணவத் தலைவர் | ப்பி.பன்னீர் செல்வம் |
| மாணவத் துணைத் தலைவர் | ஜெ.சித்ரா |
| ஆசிரியர் மன்றச் செயலர் | ஆர்.மயில்சாமி |
| ஆசிரியர் மன்ற துணைச் செயலர் | ஏ.விசாலாட்சி |
| விளையாட்டுத் துறைச் செயலர் | எம்.செல்வராஜ் |
| சமூக நற்பணி மன்றச் செயலர் | வி.அந்தோணி சீமோன் |
| கணிதத் துறைச் செயலர் | எஸ்.கனேசன் |
| உயிரியல் துறைச் செயலர் | ஆர்.பிரேமலதா |
| பொருளறிவியல் துறைச் செயலர் | ஏ.அன்பரசு |
| தமிழ்த் துறைச் செயலர் | கே.மங்கையர்கரசி |
| ஆண்டு மலர் செயலர் | ட்டி.மாதையன் |
| கைக்கலைத் துறைச் செயலர் | வி.ஷீலா |
| கேள்வி காட்சி செயலர் | ப்பி. நாகராஜ் |
| பதிவேட்டுத் துறைச் செயலர் | எஸ்.ராபியாமா |
| வரலாற்றுத் துறைச் செயலர் | கே.மணிவாசகன் |
| ஆங்கிலத் துறைச் செயலர் | ஆர்.ராஜா |
| எம்.எட் பிரதிநிதி | ப்பி.பழனியம்மாள் |

## கற்பித்தல் பயிற்சி

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்க்காக உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகளுக்கு வழக்கம்போல் ஐந்து வாரங்கள் பயிற்சி பெற அனுமதி அளித்த குமாரபாளையம் ஜே.கே.கே ரங்கம்மாள் மேல்நிலைப்பள்ளி, அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பவானி, சங்ககிரி, திருச்செங்கோடு, பள்ளிபாளையம், கவுந்தப்பாடி, பெருந்துறை, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கட்கும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பாடி வாழ்க்கை

பி.எட் மாணவர்களுக்கு சமூக சேவையும், பாடி வாழ்க்கையும் நம் கல்லூரி வளாகத்தில் 13.12.99 முதல் 17.12.99 வரை ஐந்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. பாடி வாழ்க்கை முகாம் தொடக்க விழா 13.12.99 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் முதல்வர் அவர்கள் தலைமையில் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் வி.பெரியசாமி அவர்கள் சிறப்புரையுடன் முகாம் இனிதே தொடங்கப்பட்டது.பேராசிரியர் எம்.ஜெகநாதன், பாடி முதன்மை அலுவலராகவும், பேராசிரியர் எம்.கந்தசாமி, உணவு பொறுப்பாளராகவும் பணியாற்ற, மாணவ, மாணவியரின் ஆர்வமிக்க உழைப்பாலும், கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் தங்கள் திறனை வெளிப்படுத்தினர். நிறைவு விழா 17.12.99 காலை பத்து மணியளவில் பேராசிரியர் திரு.வி.ஆர்.சிவநேசன், முதல்வர் ஸ்ரீராகவேந்திரா பாலிடெக்னிக், குமாரபாளையம் அவர்களின் சிறப்புரையுடன் நிறைவு பெற்றது.

Scanned with CamScanner

## விளையாட்டு விழா

இக்கல்லூரியில் உடற்கல்வித் துறைக்கு ஆசிரியரில்லாத குறையினைப் போக்கி விளையாட்டுப் போட்டிகளை பொறுப்பேற்று நடத்திய அனைத்து பேராசிரியர்களையம் குறிப்பாக திரு.மு.கந்தசாமி அவர்களையும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து மாணவச்செல்வங்களையும் உளமார பாராட்டுகிறேன்

## மாணவர் உதவித் தொகை

இந்த ஆண்டு ரூ.36,315 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், ரூ.27,995 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் ரூ.1,06,472 தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் தமிழக அரசு நல உதவித் தொகையாகவும் அரசு அளித்தது.

## கல்லூரி விடுதி

இக்கல்லூரியில் மாணவ, மற்றும் மாணவிகட்கான தனித்தனி விடுதிகள் உண்டு. ஆண்கள் விடுதியில் 39 மாணவர்களும், பெண்கள் விடுதியில் 51 மாணவிகளும் தங்கி பயின்று பயனடைந்து வருகின்றனர். கல்லூரி விடுதியினைத் துணைக்காப்பாளர் பேராசிரியர் மா.ஜெகநாதன் திறம்பட நடத்தி வருகிறார். அதற்காக அவர் பாராட்டுதலுக்குரியவர் ஆவார்

## ஆசிரியர் அலுவலர் பணியேற்பு மாற்றம்

இக்கல்லூரியில் உயிரியல் துறை பேருரையாளர் டாக்டர் ப்பி.குமாரசின்னையன் அவர்கள் 31.4.2000 அன்றும், நூலகர் திரு.எஸ்.ஆர்.பக்தவச்சலம் அவர்கள் 31.8.99 அன்றும் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றுள்ளார்கள். திருமதி எஸ்.கலைமகள் 20.1.2000 அன்றும், திருமதி பி.பானுமதி 1.2.2000 அன்றும் சிறப்பு விரிவுரையாளராகவும் பணியேற்று பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் சீரிய பணிக்கு எனது பாராட்டுகள்

## கல்லூரி நூலகம்

இவ்வாண்டு திட்டமில்லாத் தலைப்பின் கீழ் நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்க ரூ.10,000 அரசு நிதி உதவி அளித்துள்ளது. இவ்வாண்டு புதியதாக 38 நூல்கள் வாங்கப்பட்டன. தற்போது நூலகத்தில் உள்ள மொத்தம் நூல்களின் எண்ணிக்கை 10662 ஆகும்.

Scanned with CamScanner

## கல்விப் பயணம்

அறிவுச் சுடரை நாளும் ஏற்றும் கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமைப் பொறுப்பை களிப்புடன் ஏற்க, வழிகாட்டிகளாய் திரு.ஜெகநாதன், திரு எம்.கந்தசாமி, திருமதி.எ.நூர்ஜஹான் ஆகியோர் செயல்பட மேட்டூர், மாதேஸ்வரன் மலை, சிவ சமுத்திரம், மைசூர் பிருந்தாவனம், தர்மஸ்தலா, பேலூர், அளபேடு, சரவனபெலகுலா, மைசூர் அரண்மனை என நெஞ்சம் நீங்கா இடங்களுக்கான கல்விப் பயணம் 28.01.2000 முதல் 30.01.2000 வரை மூன்று நாட்கள் சிறப்பாகவும் மாணவர்களுக்கு பயன் தரக் கூடியதாகவும் அமைந்தது.

## புத்தாயிரமாண்டு வருகை விழா

இவ்விழா 28.10.99 ஆம் நாளன்று கல்லூரியில் மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப நடைபெற்றது. புத்தாயிரமாண்டு பிறப்பதையொட்டி பேச்சு, கவிதை, பட்டிமன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவை முன்னின்று நடத்தி மகிழ்ந்த கல்லூரி மாணவத்தலைவர் பன்னீர்செல்வம் மாணவர்கள் சரவணக்குமார், சுப்பிரமணியன், சபரிராஜன், மாணவி விமலா ஆகியோருக்கும் மற்ற அனைவருக்கும் எனது பாராட்டுகள்

## கல்லூரி காணும் வளர்ச்சி

கல்லூரிக்கு இவ்வாண்டு தபால் பெட்டி எண்ணும் (Post Box No 104) தொலை நகல் (Fax) வசதியும், இணைய இணைப்பும் (Inter net) புதியதாகக் கிடைக்கப்பட்டுள்ளது என்பதை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாண்டு பெற்றோர் ஆசிரியர் கழகம் அரசு பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் 118 ஆகும்.

பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் செயல்பட்டு வருகிறது. அக்கழகத்தின் பொறுப்பாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுகள்.

Scanned with CamScanner

இக்கல்லூரிக்கு பசுமை சேர்க்கும் நோக்கத்தோடு தன் சொந்த செலவில் அரும்பாடுபட்டு நெடுந்தூரத்திலிருந்து மரக்கன்றுகளைக் கொண்டு வந்து அன்புடன் நல்கிய பயிற்சி ஆசிரியை செல்வி ராபியாமா என்பாரின் தந்தை திரு.எம்.சாசத்கான் அவர்கட்கும் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத்தலைவராக பொறுப்பேற்று செயல்படுவதுடன் கல்லூரிக்கு இரண்டாவது தொலைபேசி தொடர்பு கிடைத்திட வழிவகை செய்திட்ட, தர்மபுரியிலிருந்து மரக்கன்றுகளை கொண்டு வந்து சேர்த்திட்ட பயிற்சி ஆசிரியை செல்வி பிரேமலதாவின் தந்தையார் திரு.ரவீந்திரன் அவர்கட்கும், கல்லூரியின் பசுமைப்புரட்சியில் தானும் பங்கு பெற வேண்டும் என்கிற வேட்கையோடு மரக்கன்றுகளை அளித்த இக்கல்லூரியின் முன்னால் கைக்கலை ஆசிரியர் என்.தாமஸ் அவர்கட்கும், பயிற்சி ஆசிரியர் திருமதி சவீதாவின் கணவர் திரு.எஸ்.கந்தசாமிக்கும் நம் கல்லூரியில் நடைபெற்ற இலக்கிய மன்றப் போட்டிகளில் வெற்றி பெற்ற நம் மாணவர்களுக்கு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கிய திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூரைச் சேர்ந்த கல்விப்பணி பல செய்து வரும் புலவர் ம.ப. ஆறுமுகம் அவர்கட்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஜே.கே.கே. சம்பூரணி அம்மாள் அறக்கட்டளை

திரு. ஜே.கே.கே.முனிராஜா அவர்களின் குடும்பத்தினர் ஜே.கே.கே.சம்பூரணி அம்மாள் அறக்கட்டளை நிறுவி அவ்வறக் கட்டளையின் பொருளீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தில் பி.எட்., மாணவர்களின் பல்கலைக் கழகத் தேர்வில் உளவியல் பாடப்பகுதியில் முதல், இரண்டாம் இடம்பெறும் மாணவர்களுக்கு பல வருடங்களாக பரிசு வழங்கி வருகின்றனர். இத் தருணத்தில் இவ்வறக்கட்டனையை நிறுவிய ஜே.கே.கே.குடும்பத்தினருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிவாக, இக்கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவித்து இவ்வாண்டு அறிக்கையினை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்.

Scanned with CamScanner

# எங்கள் முதல்வர்

இறைவன் அருளாள் பிறந்த கொடி
முதுமையில் வளர்ந்த கொடி
தெய்வத்தின் ஒளி விளக்கே
அரியலூரின் தெய்வீகமே
எங்களுக்கு தேடித்தந்த செல்வமே!
அன்பு முதல்வரே – நீவிர்
பல்லாண்டு வாழ
இறைவனை வேண்டுகிறேன்
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
வாழும் பழம், நீ சுவாமி!
உம்மை வணங்குகிறேன்
நீவிர் எந்த இடம் போனாலும்
தங்க முகமாக வரவேண்டும்
தங்கள் எண்ணம், வாக்கு செயல்
செழித்திடவே
செல்வம் பொழிந்திடவே
திருநடனம் புரியும்
தில்லை அம்பலத்தானை
வணங்குவன் எப்போதும்.

வி.சுரேஷ்குமார்
தமிழ் & தமிழ்

Scanned with CamScanner

# குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரி

## முதல்வரின் வழிகாட்டிப் பாடல்

கண்மணிக்கிளியே கண்மணிக்கிளியே
கல்வியியல் பயில வந்த கண்மணிக்கிளியே
உன்னாலத்தான் அறிவின் ஒளியும் உலகில் பரவனும்
உன்னாலதான் அமைதிவழியில் அகிலம் நடக்கனும்
அருளா மருளா உனக்கேது வேணும் கிளியே
அருள்தான் அருள்தான் ஏன் கண்மணிகிளியே
(கண்மணி)

முதன்மையறை வகுப்பினிலே முதன்முதலா பார்க்கையிலே
இதயமெனுந் தாமரையும் இதழ்விரியக் கண்டேனே
அறிவுத்திறன் கொண்டதொரு அன்புமிகு ஆசானை
பரிவுடனே பண்புதரும் உன்முகத்தில் கண்டேனே

இருபதைக்காட்டிலும் இருபத்தியொண்ணாம் நூற்றாண்டினில்
திருவது நிறைந்திருக்க திறமையுடன் பணிபுரிவாய்
உன்னைத்தானே நம்பியிந்த உலகமிருக்குது
அருளா மருளா உனக் கேதுவேணுங்கிளியே
அருள்தான் அருள்தான் ஏங்கண்மணிக்கிளியே
(கண்மணி)

அன்னம்போல நூல்பயின்று அண்ணல்வழி நீநடந்து
சொன்னசொல்லை கேட்டுநீயும் சொக்கத்தங்க மாவாயே
எண்ணமதில் நீசிறந்து எல்லைகளை மீறாமல்
கண்ணிமைபோல் கல்லூரியின் கண்ணியத்தைக் காப்பாயே

மெல்லமெல்லத் தமிழுமினிச் சாகுமென்ற சொல்லைநீயும்
இல்லையில்லை யெனுமுறையில் எங்குந்தமிழ் பரப்பிடுவாய்
மாறிவரும் சூழலிலும் மரபைநீ காப்பாய்
அருளா மருளா உனக் கேதுவேணுங்கிளியே
அருள்தான் அருள்தான் ஏங்கண்மணிக்கிளியே
(கண்மணி)

இயற்றிபாடியது : கல்லூரி முதல்வர் திரு.சி.பழநீசுவாமி அவர்கள்
நாள்: 28.10.99 வியாழக்கிழமை

Scanned with CamScanner

# பாடிமுகாம் பாடல்

(மாணவர் பாடுவதாக அமைந்தது)

பாசத்தோட பண்புதந்த பாடிமுகாம் – அது
தேசப்பற்றை ஊட்டியது எங்களுக்காம்
ஏடுகற்ற நாங்க நாடுபோற்ற வாழ
தானதந்தன தானாதன தானதந்தன தானா
செல்வராசு நாகராசு சேர்ந்து பாடுங்கய்யா
சிறந்தவழி தெரிஞ்சுதின்னு சொல்லிப் பாடுங்கய்யா
– அட பாசத்தோட

காலையெல்லாம் களிப்புடனே வேலைசெஞ்சோம் நல்ல வேலைசெஞ்சோம்
மாலையெல்லாம் மகிழ்வுடனே அறிவுபெற்றோம் பொது அறிவு பெற்றோம்
அந்தியிலே ஆடிப்பாடி அலுப்பதனை போக்கிகொண்டு
சிந்தையது மகிழ்ந்திடவே நான் பறந்தேன்
முந்திபிந்தி கற்றதில்லை இதுபோன்ற வாழ்வுமுறை
எந்தநாளும் மறந்திடுமோ நான் சிறந்தேன்
பண்ணிசைச்சா பாடல்நல்ல பாகினைப்போல்
எண்ணத்திலே இனிக்குதம்மா இனிக்குதம்மா
– அட பாசத்தோட

கூடிவாழ்ந்தா கோடிநன்மை தெரிந்துகொண்டோம் நாங்க புரிந்துகொண்டோம்
ஈடில்லாத குடியுரிமைக் கொள்கைகற்றோம் நல்ல பண்புபெற்றோம்
மக்கள்நலம் முதலுதவி சாரணீயம் சமுகப்பணி
முக்கனியின் சுவையெனவே நான் பயின்றேன்
முந்தையதை மாற்றிப்புது விந்தைகளை படைக்கும் எங்கள்
தந்தையான முதல்வரையே நான் பணிந்தேன்
முந்துபுகழ் ஆசிரிய அறிஞர்க்கெல்லாம்
செந்தமிழில் வணக்கஞ்சொல்லி வாழ்த்துகின்றேன்
– அட பாசத்தோட

இயற்றிபாடியது : கல்லூரி முதல்வர் திரு.சி.பழநீசுவாமி அவர்கள்
நாள்: 16.12.99 வியாழக்கிழமை


Scanned with CamScanner

# தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு ஒரு வேண்டுகோள்

(மாணவர் பாடுவதாக அமைந்தது)

நாடாளும் நாயகமே – தமிழ்
நாடாளும் நாயகமே – நாங்கள்
ஏடாளும் நாள் வருமோ
கல்வியியல் கற்று காத்திருந்து தினம்
கண்ணீரில் கரைகின்றோம் யாம் – (நாடாளும்)

குறைவின்றி கற்றோமே யாம் எதையும்
நிறைவாக செய்வோமே யாம்
முறையாகவே கல்வியியல் தன்னிலே
பட்டம் பெற்றோரை படியேற்றுங்கள் – (நாடாளும்)



ஆறாத துயர்நீங்கவும் தரம்
மாறாது தலைத்தோங்கவும்
ஆறாவது முதல் அனைவருக்கும்
யாமே ஆசான் என்று அறிவியுங்கள் – (நாடாளும்)

பாடாதகுயில் போலவும் என்றும்
ஆடாத மயில்போலவும் இன்று
வாடமலே எம்மை வாழவைக்க நல்ல
வகையான மாற்றம் செய்வீர் – (நாடாளும்)

# வாழ்த்துப்பா

கலைகளிலே பட்டம் பெற்று கல்வியியல் கற்க வந்த
கண்மணியே கண்ணின் மணியே
நிலைகளிலே நீ உயர்ந்து நீண்டகாலம் வாழ்க என்று
வாழ்த்துக்கின்றேன் வாழ்க வாழ்க – (கலைகளிலே)

ஏடதனில் கற்றதுபோல் நாடதனை நாடிநின்று
வீடதனைக் காப்பதுபோல் வீறுகொண்டு காத்திடுவாய்
கற்றுயரக் பங்களித்த கடையனுக்கும் வழிகாட்டி
நற்றமிழை நீ காத்து நாளும் அதை போற்றிடுவாய்
அறிவொளியை நீ பரப்பி அனைவருக்கும் கண்திறப்பாய் – (கலைகளிலே)



பொருளதனை போற்றுகின்ற புன்மைதனை நீ விடுத்து
அருளதனை கைக்கொண்டு அகிலமிதை ஆட்சி செய்வாய்
கடமையிலே கதிரவன் போல் காலம்தோறும் நீ உழைத்தால்
உடமையெல்லாம் உனதாகும் உன்மையிது நீ உணர்வாய்
அறிவொளியை நீ பரப்பி அனைவருக்கும் கண் திறப்பாய் – (கலைகளிலே)

இயற்றிப்பாடியவர் : கல்லூரி முதல்வர் திரு.சி.பழநீசுவாமி அவர்கள்

Scanned with CamScanner

# இளைஞர்களே வாருங்கள்

ஏ
இந்திய இளைஞனே
முழங்காலில் முகம் புதைத்து
முடங்கி கிடந்தது போதும்
முகத்திரையை கிழித்து விட்டு
முன்னேறு!

வேலையில்லாத் திண்டாட்டத்தாலும்
சமுதாயச் சீரழிவுகளாலும்
சாதி மத வெறிகளாலும் நீ
மாண்டது போதும் எழுந்திரு

இருட்டறையில் கிடக்கும்
இந்திய இளைஞனே!
வெளியில் வா!

இளைஞனே!
இந்திய இதயத்தின்
துடிப்பு நீ
இதயம் இருந்தால்
துடிப்பும் உண்டு
துடித்து விடு

முள்வேலிகளால் எல்லைகளை
மூடிவைத்தது போதும்
இனிமேலாவது
இளைஞர்கள் ஜாக்கிரதை என்று
எல்லையில் எழுதி வைப்போம்!

நூறு கோடி மக்களின்
இதயம் இந்தியா
சிறு சிற்றிலல்ல
சீரழிந்தவர்கள் சிதைத்து விளையாடுவதற்கு

இந்திய நாட்டில்
சிங்கங்கள் அதிகம்!
ஆம் !
இந்திய நாட்டில்
இளஞ்சிங்கங்கள் அதிகம்

இரவில் வாங்கிய சுதந்திரம்
இன்னும் விடியவே இல்லை என்ற
புலம்பல் மொழிகளைப்
புறந்தள்ளுவோம்

விடியவில்லை என்றால் என்ன?
விடியலைத் தேடி நாம் புறப்படுவோம்!



சு.சுபாமகேஸ்வரி
தமிழ் & தமிழ்

Scanned with CamScanner

# வாய்ப்புகள்



ஒரு ஊரில் பெரும் மழை பெய்து ஊரே வெள்ளக்காடாகியிருந்தது. ஊரில் இருந்த பெரிய குளம் ஒன்று உடைத்துக் கொண்டுவிட்டது. நீர் மட்டம் உயர்ந்து கொண்டே வந்தது. அனைவரும் இடம் பெயர ஆரம்பித்துனர். ஒருவன் மட்டும் தனது வீட்டு கூரை மேல் உட்கார்ந்து கடவுளை நோக்கி காப்பாற்றுமாறு பிரார்த்தைனை செய்ய ஆரம்பித்தான். தப்பி சென்ற அனைவரும் அவனை அழைத்தனர். கடவுள் காப்பாற்றுவார் என்று கூறி மறுத்துவிட்டான். நீரின் மட்டம் உயர்ந்து கொண்டே வந்தது. சிறிது நேரத்தில் ஒரு படகில் சென்றவர்கள் அவனை வற்புறுத்தி அழைத்தனர். நீங்கள் போய் கொள்ளுங்கள் என்னை கடவுள் காப்பாற்றுவார் என்று மறுத்து விட்டான். அவன் அமர்ந்திருந்த கூரை முழுகும் அளவிற்கு தண்ணீர் வந்துவிட்டது அப்போது கட்டுமரத்தில் சென்ற இருவர் அவனை அழைத்தனர் அவர்களிடமும் மறுத்துவிட்டு மேலும் உருக்கமாக பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டான். மேலோகத்திற்குச் சென்று கடவுளிடம் கோபமாக, "நான் எவ்வளவு நம்பிக்கையோடும் பக்தியோடும் உங்களை நம்பியிருந்தேன் என்னை கைவிட்டுவிட்டீர்களே " என்று முறையிட்டான். அதற்கு கடவுள் "நான் உனக்கு முதலில் மக்கள் ரூபத்திலும், பின் படகு ஒன்றை அனுப்பியும், கடைசியாக கட்டுமரம் அனுப்பியும் காப்பாற்ற விழைந்தேன் நீதான் என் அனைத்து உதவிகளையும் நிராகரித்து விட்டாய் " என்றார்.


M.ஜெயராஜ்
கணிதம் & பொருளறிவியல்

Scanned with CamScanner

# சிறைக்குள் உதித்த சூரியன்

(பெரியாரின் சிறைவாழ்க்கையை அடிபொற்றி எழுதப்பட்டது)

தமிழனை எண்ணியதற்காகக்
கம்பிகளை எண்ணியவனே
இருண்ட வானம் விடிவதற்காகச்
சிறைக்குள் அடைந்த சூரியனே
கமிஷன் கடையில்
மூடைகளை ஏலம் போட்டு
தமிழன் சுமந்த
மூட நம்பிக்கை மூடைகளையும்
ஏலம் போட்டவன் நீ!
தமிழ் நாட்டின் வரைபடமாய்
தொங்கும் உனது தாடியில்
மூட நம்பிக்கைக்குச்
சுறுக்கு கயிறு கொழுந்தாய் !
இல்லை தெய்வம் என்றவன் நீ,
அரிசனங்களை
ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றாய்
தீண்டாமைக்கு எதிராய் !
பொய் வேதம் என்றவன் நீ
தமிழில் அர்ச்சிக்கத்
தனியாது போராடினாய்
தமிழுக்காக!
அபின் வேகம் போல்
அறிவை மயக்கும் கள்ளென்று
தென்னை ஐந்நூற்றை வெட்டினாய்!
தேசமெங்கும்
உன் காற்றை வீசினாய்
உன் பேச்சு மக்களின்
மூடச் சிறையை உடைத்தது
தமிழன் மூளையைக்
கட்டியிருந்த
பூணூலை அறுத்து
ஆறாவது அறிவுக்கு
வேலை வாங்கி
கொடுத்தவன் நீ!
கதர் சட்டைக்காகப் போராடிக்
கட்டம் போட்ட சட்டை பெற்ற
கறுப்புச் சட்டைக்காரன் நீ!



M.கண்ணன்
(பொருளறிவியல் & தமிழ்)

Scanned with CamScanner

# உலக சிந்தனைகள்

ஏழைகள் உணவைத் தேடுகின்றனர்
செல்வர் பசியைத் தேடுகின்றனர்

— இந்தியா

நீங்கள் துன்பத்தை அறியவில்லையென்றால்
இன்பத்தையும் அறியமாட்டீர்கள்

— ரஷ்யா

மனிதன் வெற்றியிலே கற்பது சொற்பம்
தோல்வியிலே கற்பது அதிகம்

— ஜப்பான்

நாம் அழுதுகொண்டே பிறக்கிறோம்
குறை சொல்லிகொண்டே வாழ்கிறோம்
ஏமாற்றமடைந்து இறக்கிறோம்.

— இங்கிலாந்து

**தா.தயானந்த்**
வரலாறு & தமிழ்

# Happiness

Each drop of rain is water
As much as in the sea
Each whiff of air is sample
of all the air there be

One dead soldier is sample
of terror all wars bring
As one tear is sample
of the sorrow in weeping

But, one laugh is not sample
of happiness one may see
As this poem is not sample
of the poet that is me



A.Phebe Sheela
English & English

Scanned with CamScanner

# திசைகள்

சரளா அந்த மேட்டுக்குடி கிராமத்து மண்ணை தொட்டபோது மேகம் இருட்டிக் கொண்டு வந்தது இன்னும் சற்று நேரத்தில் தூரல் போடும் போல இருந்தது வண்டி கட்டி வரச் சொன்ன வேலப்பன் வேறு இன்னும் வரவில்லை. ஐந்து நிமிடம் காத்திருந்தாள். கண்ணுகெட்டிய தூரம் வரை வண்டியை காணவில்லை. பொறுமை இழந்தவளாய் ஒற்றையடிபாதையை நோக்கி புறப்பட்டாள்.

சரளா 27 வயதிலும் 20 வயதினை காட்டும் இளமையான தோற்றம் கொண்டவள், மாநிறமாய், சிரித்தால் கன்னத்தில் குழி வேறு தனி அழகு சேர்த்து. ஆனால் காதின் ஓரம் மட்டும் ஒரு சிறு தழும்பு திருஷ்டி பொட்டு போல அது என்னவென்று இன்று வரை அவளுக்கு புரியவில்லை, டாக்டரான இவள் எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் நடத்தவும், ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்யவும். மேட்டுக்குடியை அடைந்துள்ளாள். எப்படியோ வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டாள். இன்னும் வேலப்பனை காணோம். இப்போது வருண பகவான் தன் பணியை ஆரம்பித்தான். திண்ணை மீது அமர்ந்து குத்தங்காலிட்டு அமர்ந்து கொண்டாள் மெல்லிய மண்வாசனை நாசியை துளைத்து இதயத்தில் இறங்கியது. லேசான சிலிர்ப்பு தோன்றியது. சாரலில் முந்தானையை தலைக்கு இட்டவாறு வயதான பெண்மணி ஒருத்தி வாசல்படிக்கு ஓடிவந்தாள், "மன்னிச்சிடுங்க, அம்மா அந்த வேலப்பன் குடிச்சிப்புட்டு குடிசியில விழுந்து கிடக்கு, நான் வீட்டை சுத்தம் பன்னறவ. அத்தான் சாவியை எடுத்து ஓடியாந்தேன்" என்றாள் எழுவது வயது மதிக்க தக்கவள் உடல் மிகவும் வற்றி போய் கன்ன எலும்புகள் தெரிந்தது. நூல் சேலை உடுத்தி இருந்தால். ஜாக்கெட்டில் கிழிசல் காணப்பட்டது. அவன் வரட்டும் நான் பேசிக்கிறேன் என்று கூறியவாறு சாவியை வாங்கி திறந்தாள் உன் பேறு என்ன சென்னி இருவரும் நுழைந்து பொருட்களை பிரித்து அடுக்க ஆரம்பித்தனர். சென்னி ஏதேச்சையாய் அந்த கன்னத்து ஓரத்தழும்பை பார்த்தவள் அதிர்ந்து போனாள் கேட்க நினைத்தவள் பின் நிதானிக்கையில் சரளா சென்னி நீ போய் நாளை ஆஸ்பத்திரிக்கு வா என்றாள்

குடிசை கீற்றுக்களில் நீர்வடிந்து கொண்டு இருந்தது. லேசான ஈரகசகசப்பில் ஓலை பாயில் படுத்திருந்த சென்னிக்கு இருப்பு கொள்ளவில்லை நாளை கேட்பது என்று முடிவு செய்து விட்டாள்.

மறுநாள் மருத்துவமணை சீர் செய்த பின் டீக்கடைக்கு சென்னி சென்றாள், வேலப்பன் மருத்துவமனை வந்தவனுக்கு நல்ல பாட்டு போட்டு சரளா ஏதோ வேலை சொல்லி அனுப்பினாள் இதை கேட்டு பயந்து சென்னி அன்று கேட்கவில்லை.

இந்த ஒருவார காலத்தில் சரளாவிற்கு சென்னி மிகவும் பழக்கப்பட்டுபோனாள் இருவரும் வண்டிகட்டி பக்கத்து கிராமத்திற்கு முகாமிற்கு சென்றனர். இதுதான் சமயம் என்று சென்னி கேட்டேவிட்டாள் அம்மா உங்க அழகான முகத்திற்கு அந்த தழும்பு தான் கெடுக்கு எப்படி ஆச்சு என்றாள் ம்.. அது எப்படின்னு எனக்கு தெரியல்லை எங்க அப்பாவுக்கும் தெரியல என்றால் சரளா உங்க அப்பா பேறு சென்னி

சுப்பராயன் ஏன் கேக்கற சரளா

மிலிட்டிரி சுப்பராயனா

ஆமா அவர உனக்கு தெரியுமா

இல்லா நாட்டாமக்காரருக்கு பழக்கம் அதான் கேட்டேன் என்றாள் பொய்யாக

மாரியம்மன் திருவிழாவிற்கு அனைவரும் கிளம்பிய பின் கடைசியாய் புறப்பட்டனர், சென்னியும் சரளாவும் வில் வண்டி குடை சாய்ந்து வண்டி சரளா கன்னத்தில் கிழித்த தழும்பு பெரிய ஆசுபத்திரிக்கு போயும் நன்றாகவில்லை. பின் கணவன் கையாடிய பணத்தை பஞ்சாயத்தில் நாட்டாமைகாரர் கட்ட சொன்னபோது இவ்வாய்ப்பை பிள்ளை இல்லாத மிலிட்டெரி சுப்பையா பயன்படுத்தி கொண்டார்.

சரளா தொட்டவுடன் சென்னிக்கு நினைவுதிரும்பியது முகாம் ஆரம்பித்தது, சரளாவின் பின்னால் சென்னி நின்றுறிருந்தாள் நோயாளிகள் பரிசோதனை நடந்தது இத்தனை நாளைய தாயும் மகளும் தனித்தனி திசையில் வாழ்ந்தனர். இப்போது பக்கம் இருந்தும் சென்னியாள் சரளாவை அன்பாய் அனைத்து பேச முடியாமல் தவித்தாள் தான் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்பதால்,

மகள் எய்ட்ஸ் விழிப்புனர்வு முகாம் நடத்திகொண்டிருந்தாள்

ஓர் ஓரத்தில் கண்களில் கண்ணீர் துளிக்க சந்தோஷபட்டது அந்த தாயின் மனம். இந்த 10 நாட்கள் மகளை காணும் பாக்கியத்திற்காக.

தே.ஆனந்த குமார்
உயிரியல் & தமிழ்

## வானம் எல்லையில்லை

வேர்கள் இரண்டெனினும் விந்தை மரமொன்று
பார்க்கும் விழியிரண்டு ஒன்றன்றோ பார்வை
மொழியினில் சொல்ல முயன்றிடினும் தோற்பேன்
விழியில் வழிந்திடும் பூ.

ஒரு தட்டில் சோறுண்ணும் ஆடையை மாற்றும்
பெருநெறுப்பு தீண்டினோவும் தானும் வருந்தாமல்
ஆலாய் பறக்கும் அடிமனத்துன்பமெனும்
பாலையிலும் பூத்துவிடும் பூ

கொஞ்சம் முகம் சுழித்தால் துன்பத்தை தானேற்கும்
கொஞ்சம் சிரிப்பிற்காய் கோடி முறை கெஞ்சி நிற்கும்
மிஞ்சும் இடரெனினும் மீட்டு கைகுழுக்கும்
நெஞ்சுக்குள் பூத்ததொரு பூ

தாழவீழின் தாங்கிநமை ஏற்றிவிடும் ஏணியன்றோ
வாழவைக்கும் நட்பிற்கு வானமோ தாழ்வெல்லை
வான்மண் இரண்டெனினும் வட்டநிலா ஒன்று போல
நான் நீ ஒருமையெனும் நட்பு

ரெ.சுப்ரமணியன்
தமிழ் & தமிழ்

## வெளிச்சம் காணாத இரவுகள்

ஒட்டிய வயிற்றுடனும் வாடிய முகத்துடனும்
ஒளியிழந்த கண்ணுடனும் நிற்கும்
எங்களை இன்னுமா தெரியவில்லை
நாங்கள் தான் அனாதைகள் - ஆமாம்
நாங்கள் தான் அனாதைகள்!
பேனா பிடிக்கவேண்டிய கரங்கள்
காகிதம் பொறுக்கும் அவலநிலை!
பிஞ்சு விரல்கள் பட்டாசு தொழிலில்
வஞ்சனையாய் வாடும் நிலை!
அறுசுவை உணவும் நெய்மணக்கும்
பண்டமும் அர்ப்பணம் இறைவனுக்கு!
உயிரற்றசிலைக்கு உபசரிப்பு
உயிருள்ள வயிற்றுக்கோ பசி பொறுப்பு!
கோடிகோடியாய் கொட்டி கும்பாபிசேகம் அங்கே
கோடிபோடா வக்கில்லா பிணங்கள் இங்கே!
நாங்கள் கசக்கிக்கட்ட தயார்
ஆனால் கந்தையில்லை!
சினிமா போஸ்டர்களை உடுத்திக்கொண்டோம்
அங்கேயிம் எங்கள் மாட்டுப்
பங்காளிகளின் சண்டை
சினிமா நாயகியின் ஆடை கலற்றி
எறியப்பட்டடால் அதை இங்கேதூக்கிப்போடுங்கள்!
இங்கே ஆயிரம் அனாதைகளின்
மானம் காக்கப்படும்!
உழைத்து உழைத்து ஓய்ந்த நாங்கள்
அறுவடை செய்து விட்ட ஆசைகள்! ஆம்!
நாங்கள் வெளிச்சம் காணாத இரவுகள்!

கு.அலமேலு
தமிழ் & தமிழ்

Scanned with CamScanner

# GLOBAL WARMING

The earth absorbs about 66% of the solar flux incident on it, while it reflects and scatters back into space about 34% of the solar flux. The average surface temperature of the earth is maintained around 15° C due to reabsorption of radiation by water vapour and Carbon dioxide. The radiation thus absorbed by Carbon dioxide and water vapour is partly re-emitted to the Earth's surface. The net result is that the Earth's surface gets heated up by a phenomenon called the Greeb House Effect.

The current global trend in deforestation along with iIncreased combustion of fossil fuels have a cumulative effect on the net increase in Carbon dioxide content. Forests are the areas where a great deal of photo synthesis occurs but readily oxidizable carbon in the form of wood and humus. The over all result is that they serve to maintain a balance in the atmospheric Carbon dioxide level.

The temperature effect of $CO_2$ and water vapour combine together to have a long range impact on the global climate. As the surface temperature increases with increase in level of carbon dioxide, the evaporation of surface water increases. It has been estimated that this combined effect will bring about a 3° C rise in surface temperature for a doubling of the $CO_2$ concentration, which may occur around 2050 A.D.

It may be noted that a slight increase in surface temperature say 1° C, affect the food production. The biological productivity of the ocean would also decrease.

Another effect is the rise in sea levels. Since oceans act as reservoirs of heat, I could result in rise of sea water at increased temperature, partial melting of glaciers, ice - gap of Green land and also polar ice caps. This rise of sea levels would threaten coastal countries, some 60-odd island nations who face deep inroads by the sea, like the Maldives, Bangladesh may be totaly submerged. In India coastal cities such as Chennai, Goa may meet similar fates.

As mentioned before, rising temperature could alter climate. Some of the more fertile region of North America and Mediterranean could turn arid. In india some climate models predict a drop in wheat production in the fertile northern region. More violent cyclones and flods are expected on the eastern coast.

The $CO_2$ which constitues a fraction of the atmospheric gases, 0.03% of the total, plays an important role in changing the global climate without $CO_2$ the Earth would be as cold as the moon. But if its quantity increases too much, the Earth may share the fate of its neighbouring planet Venus with surface temperature of 450° C.

M. Geethamani
Physical Science & Maths.

Scanned with CamScanner

# CHARADE

I am a five lettered word
From me starts the life's stream
If you cut off my first and last
You cannot listen without it.
If you cut off my last, you can listen.
If you cut off my last three
I am a pronoun
If you cut off my first two
I am a cultural activity.
What am I?

Answer : HEART

D.PRABA
English & English

## Only a Minute but ....

People oftern ask! " Can we not wait a Minute?"
Will our existence be gone for ever?
But in a minite so many wonders.




In a minute :

1) 6000 meteorities fall from the sky
2) The earth rotates 950 miles on its axis
3) 100 persons die and 114 are born
4) 34 marriages take place
5) 16 divorces occur in the world
6) 60 lakhs of cigeratties are smoked
7) 6,38,000 persons drink liquor
8) 4,600 shoes are stiched
9) 68 motor cars are manufactured

P.Nagaraj, M.Sc.,
Physical Science & English

# Hopes and Fears in the year 2001 to 3000

With the 20th century drawing to a close and with the world at the threshold of the third Millenium (2001 to 3000) there are new hopes for mankind, intermingled with certain ferars and forebodings. It is interesting to note how, at the beginning of the year 1000, the trend was different with China, India and Muslim World having rich civilizations in stark contrast with Western Europe which had a dull past. As the Millenium unfolded there was a drastic change with world there power shifting from Asia to Western Europe. There was a long standing fear that the year 1000 constituted the beginning of the end of the world, as it was believed that the history of the world consists of six Millenium and the world has already been created around 5000 years before christ.

Fear of the end of the world still exists as far as the next millenium is concened though unlike the religious fears of the past, the present situation reflects the fear of people destroying themselves.

Mankind is facing a choice between self - destruction and self - preservation but as most of the threats are self- induced they are conquerable. Historians are worried that the vast technological revolution and its pace and power will be too much for society which will find it difficult to adjust to the change. The of the danger bomb and the nuclear weapons constitute the biggest feat of the future, because humans can destory themselves with these weapons.

Scientists believe that the human body itself will be altered within the next 1000 years, genes will be manipulated, and microchips will be used to aid the functions of the brain.According to scentist Asiunor, space can be inhabited as population growth will reach intolerable limits and occupying space will ease the border on the earth. Earthlings will have populated the galaxy by 3000, flights to the stars will be very common.

D.PRABA
English & English

Scanned with CamScanner

# கல்லூரி மன்ற பொறுப்பாளர்கள்



P. பன்னீர்செல்வம்
மாணவர் தலைவர்



J. சித்ரா
மாணவத் துணைத் தலைவர்



A. விசாலாட்சி
ஆசிரியர் மன்ற துணைச் செயலர்



M. செல்வராஜ்
விளையாட்டுத் துறைத் தலைவர்



V. அந்தோனி சீமோன்
சமுக நற்பணி மன்றச் செயலர்



S. கணேசன்
கணித துறைச் செயலர்



V. பிரேமலதா
உயிரியல் துறைச் செயலர்



R. மயில்சாமி
ஆசிரியர் மன்றச் செயலர்



R. ராஜா
ஆங்கிலத் துறைச் செயலர்

Scanned with CamScanner



S. அன்பரசு
பொருளியல் துறைச் செயலர்



வ.ஷீலா
கைக்கலைச் செயலர்



P. நாகராஜ்
கேள்வி காட்சி கல்விச் செயலர்



S. ராபியாமா
பதிவேட்டுச் செயலர்



க.மணிவாசகம்
வரலாற்றுத்துறைச் செயலர்



தி.மாதையன்
ஆண்டு மலர்ச் செயலர்



P.பழனியம்மாள்
எம். எட். பிரதிநிதி



கா.மங்கையர்கரசி
தமிழ்துறைச் செயலர்

**கிரிமுருகன் பிரிண்டர்ஸ்,** கொமாரபாளையம், போன்: 64882

Scanned with CamScanner